# மக்கள் தலைவர்களின் சமூகநீதிப் பயணங்கள் வரலாற்றில் எப்போதும் நிலைத்து நிற்கும்!



இன்றைய உலகில் பிளவுவாதமும், வெறுப்பும் அதிகரித்திருக்கிற வேளையில் ஒரு சில தலைவர்களே மனிதம் போற்றும் சமநிலைக்காக பாடுபட்டு வெற்றி பெறுவார்கள். அதுபோன்ற ஒரு மாபெரும் தலைவர்தான் போப் பிரான்சிஸ். கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் ஆண்டவரின் மறைவை உலகமே துக்க நாளாக அனுசரிப்பதற்கு காரணம் அவரது மாபெரும் சீர்திருத்த பணிகள் தான். 140 கோடி மக்களைக் கொண்ட கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக வானளாவிய அதிகாரம் இருந்த போதிலும் அதனை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவே பயன்படுத்தினார்.

மதத் தலைவராக இருந்த போதிலும், மதங்களைக் கடந்து உலக மக்களை நேசித்ததாலேயே இன்றைய தினம் உலகம் முழுவதும் போற்றப்படுகிறார். எல்லாருக்கும் எல்லாம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்ததால், திருச்சபையின் கதவுகளை அனைவருக்கும் திறந்தார். திருச்சபையால் பெரும்பாலும் விலக்கி வைக்கப்பட்ட LGBTQவினர்களை ஏற்றுக்கொண்டார்.

திருநங்கை விசுவாசிகளின் ஞானஸ்தானத்தை அங்கீகரித்தார். ஏழைகள், சொந்த நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாட்டில் குடியேறிய புலம்பெயர் மக்கள் என விளிம்புநிலை மக்களை பாதுகாப்பதில் உறுதியாக இருந்தார் போப் ஆண்டவர். தன் பாலினத்தவர்களை புறக்கணிக்கும் பழமைவாத்தை எதிர்த்து குரல் எழுப்பினார். இதுபோன்ற முற்போக்கான செயல்களின் மூலம் திருச்சபைக்குள், பாரம்பரியவாதிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்புகளை எதிர்கொண்ட போதிலும் மக்கள் பக்கமே நின்றார்.

குரலற்றவர்களின் குரலாக போப் பிரான்சிஸ் இருந்ததால் தான் அவரை மக்களின் போப் என்று கொண்டாடி வருகின்றனர். விவகாரத்து பெற விரும்பும் கத்தோலிக்கர்கள் தேவாலயத்தில் மறுமணம் செய்து கொள்ளும் வகையில் திருமண ரத்து செயல்முறையை எளிமையாக மாற்றும் வகையில் சீர்திருத்தத்தை மேற்கொண்டார். மதநல்லிணக்கத்தை அழுத்தமாக வலியுறுத்தி வந்த போப் பிரான்சிஸ், கத்தோலிக்கர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான உறவை மேம்படுத்தும் உடன்படிக்கையை முன்னெடுத்தார்.

இதற்காக அல் அசார் இமாமுடன் "மனித சகோதரத்துவ" உடன்படிக்கையிலும் கையெழுத்திட்டார். மதங்களுக்கு இடையேயான உரையாடல்களுக்காக போப் ஆண்டவரின் முன்னெடுப்புகள் கத்தோலிக்க உலகத்தைத் தாண்டியும் அவருக்கு பெரும் மரியாதையை பெற்றுத்தந்தன. ஏற்றத்தாழ்வு, வெறுப்பு, சர்வாதிகாரம் ஆகியவற்றின் ஆதிக்கம் சில காலங்கள் தலைதூக்கினாலும், போப் பிரான்ஸிஸ் போன்றவர்கள் அதனை சரி செய்யும் தலைவர்களாக உருவெடுத்து சமூகத்தை சமநிலைபடுத்துகின்றனர்.

**உயர்ந்த எண்ணம் கொண்ட தலைவர்களின் செயல்பாடுகள் எப்போதும் மக்களுக்காகவே இருக்கும் என்பதை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் தளபதி அவர்களும் தமிழ்நாட்டில் முற்போக்கான ஆட்சி செய்து வருகிறார். எல்லாருக்கும் எல்லாம் என்பது தான் முதலமைச்சர் தளபதியின் ஒரே கொள்கை. அதனால்தான், பொருளாதாரத்தில் பின் தங்கியிருக்கும் எளிய மக்களுக்கும், சமூகத்தால் புறக்கணிக்கப்படும் விளிம்புநிலை மக்களுக்குமான ஏராளமான நலத்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறார்.**

உடலில் குறைபாடு உடையவர்களை கருணை உள்ளத்தோடு மாற்றுத்திறனாளிகள் என பெயரிட்டு அழைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரின் புதல்வரான எங்கள் தலைவர், விளிம்புநிலை சமூகத்தை பிரதான நீரோட்டத்திற்கு கொண்டு வரும் உன்னத சிந்தனையுடன் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி பிரதிநிதித்துவம் அளித்து மானுட சமுதாயத்தில் உயர்ந்து நிற்கிறார்.

அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தி நிறைவேற்றிய அருந்ததியருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு சட்டம், உயர் கல்வி நிறுவனங்களான மருத்துவம், பொறியியல், சட்டம், கலைக் கல்லூரிகளில் அந்தச் சமூகத்தினர் அதிக இடங்கள் பெற்று முன்னேற வழி ஏற்படுத்தியிருப்பது, சமத்துவத்தை நோக்கிய திராவிட மாடல் ஆட்சியின் சான்றுகளுள் ஒன்று.



**ஆவடி சா.மு.நாசர்,**
**சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர்**

புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், விடியல் பயணத் திட்டம், நான் முதல்வன் உள்ளிட்டவை சமூக நீதி பயணங்களை வலுப்படுத்தும் முத்தான திட்டங்கள். தமிழ்நாட்டைப் பின்பற்றி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்தபடுகிறது. இல்லம் தேடி மருத்துவம் திட்டத்திற்கு ஐ.நா அமைப்பு விருது அளித்து கவுரவித்திருக்கிறது.

**முதல்வரின் மனதிற்கு நெருக்கமான காலை உணவுத் திட்டம், வெளி மாநிலங்கள் மட்டுமல்லாமல் இங்கிலாந்து, கனடா போன்ற வெளிநாடுகளிலும் செயல்படுத்தப்படுகிறது.**

**முதலமைச்சர் வெற்றிகரமாக செயல்படுத்தியிருக்கும் அண்ணல் அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், 174 மாணவர்கள் வெளிநாடுகளில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். நான் முதல்வன் திட்டத்தின் கீழ் முதல்வர்களை உருவாக்குகிறார் நம்முடைய முதலமைச்சர். "நான் மட்டும் முதல்வன் அல்ல; தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் முதல்வனாக வேண்டும்" என்ற உயர்வான எண்ணத்தின்படி, செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் தற்போது 50 மாணவர்கள் ஐ.ஏ.எஸ் தேர்வில் வெற்றி பெற்று மக்களுக்கு சேவையாற்றவுள்ளனர்.**

இதுமட்டுமல்ல, இறையாண்மையை பாதுகாக்கவும் முன்களத்தில் இருந்து தீவிரமாக போராடி வருகிறார் கழகத் தலைவர். மதங்கள் வேறுபட்டிருந்தாலும், மனங்கள் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்! மனதால் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்! அதுதான் பண்பட்ட முன்னேறிய சமூகத்துக்கு அடையாளமாக விளங்கிட முடியும்! அப்படிப்பட்ட சமூகமாகத்தான், தமிழ்ச் சமூகம் விளங்குகிறது! இதற்கு அடித்தளம் போட்டது, நம்முடைய திராவிட இயக்கம்! மக்களின் மத உணர்வுகளை மதித்து இறைவழிபாட்டுத்தலங்களை மேலும் வளப்படுத்துவதில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும் திராவிட மாடல் ஆட்சியில், 2,500க்கும் மேற்பட்ட கோயில்களின் திருப்பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு திருகுடமுழுக்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஜெருசலேம் புனித பயணம் செல்வதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தில், இப்போது ஒரு பயனாளிக்கு நிதி உதவியாக 37 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இந்தத் திட்டத்தில் 600 பயனாளிகள் பயனடைகிறார்கள். இதில் 50 இடங்கள், கன்னியாஸ்திரிகளுக்கும், அருட்சகோதரிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. தொன்மை வாய்ந்த தேவாலயங்களைப் புனரமைக்கும் திட்டத்தின்கீழ், தேவலாயங்களை புனரமைக்கும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சிறுபான்மையின மக்கள் பயன்பெற பல்வேறு நலத் திட்டங்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் 405 கோடி ரூபாய் அளவில் அரசு நிதி தரப்பட்டிருக்கிறது. சிறுபான்மையின கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்க 76 ஆயிரத்து 663 மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியா என்ற பன்முகத்தன்மை கொண்ட நம்முடைய அழகிய நாட்டில், அனைவரும் சமத்துவமாக ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு தடையாக, மதத்தை அரசியலுக்குப் பயன்படுத்தி, மக்களின் உணர்வுகளைத் தூண்டி, பிளவுவாத அரசியல் செய்பவர்களை எதிர்ப்பதற்கு கழகத் தலைவர் எப்போதும் தயங்கியதில்லை.

ஒவ்வொரு குடிமகனும் அவரவர் மதங்களைப் பின்பற்றுவதற்கான உரிமையை பாதுகாப்பது அரசின் கடமை என்பதை அழுத்தமாக வலியுறுத்தும் நம்முடைய தலைவர், நாட்டின் மத நல்லிணக்கத்திற்கு இடையூறாக இருக்கும் வக்ஃப் திருத்த சட்டத்திற்கு எதிரான சட்டப் போராட்டங்களையும் தீவிரமாக முன்னெடுத்துள்ளார்.

காஷ்மீர் சிறப்புப் பிரிவு ரத்து, குடியுரிமைச் சட்டம் என நாடு முழுவதும் இருக்கும் இஸ்லாமியர்களுக்கு எந்த பிரச்சினை வந்தாலும் தமிழ்நாட்டில் இருந்துதான் முதல் குரல் ஒலிக்கும். அது கழகத்தின் ஜனநாயகக் குரலாக இருக்கும்.

இதுபோன்று சூழலில் தான், சமூநீதிக்காக வாழ்நாள் எல்லாம் பாடுபட்ட போப் ஆண்டவரின் மறைவுச் செய்தியைக் கேட்டு முதலமைச்சர் தளபதி அவர்கள் மிகுந்த வேதனையடைந்தார். சட்டப்பேரவை மூலம் இரங்கல் தெரிவித்ததோடு, அரசு சார்பில் துக்கமும் அனுசரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகளாக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரான என்னையும், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் அவர்களையும் ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் "மக்கள் போப்பின்" இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்க அனுப்பி வைத்தார். மனிதம் போற்றும் கத்தோலிக்க திருச்சபையின் தந்தை போப் பிரான்சிஸுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் நேரில் மரியாதை செலுத்துவதற்கான நோக்கமும் இதுதான். இதை நான் மட்டும் சொல்லவில்லை, கத்தோலிக்க திருச்சபையின் கார்டினல்கள் ஓஸ்வால்டு கிரேசியஸ், கிளிமீஸ் உள்ளிட்டோரே வாடிகனிலேயே இதை பதிவு செய்திருக்கின்றனர்.

அதாவது, **"கத்தோலிக்க திருச்சபையில் முற்போக்கான சீர்திருத்தங்களை செய்த போப் பிரான்சிஸின் மகத்தான பணிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக சமூக நீதிக்கான நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு அரசு சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருப்பதாக பாராட்டியிருக்கிறார்கள்"**

மக்கள் தலைவர்களின் பணிகள் எப்போதும் முடிவடையாது. அது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி போன்ற ஆளுமைகள் மூலம் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

---

## எலியும் – தவளையும் கதை – கூடா நட்பு கேடாய் முடியும்!

# திருவண்ணாமலை கோவிலுக்கு வருபவர்களின் வாகனங்களை நிறுத்த பெருந்திட்டம் உருவாக்கிடுக!

## சட்டப் பேரவையில் – பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேச்சு!

சென்னை, ஏப். 28-

சட்டப் பேரவையில் சுற்றுச்சூழல் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசுகையில் திருவண்ணாமலை கோவிலுக்கு வருபவர்களின் வாகனங்களை நிறுத்த பெருந்திட்டம் ஒன்று உருவாக்கிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை மானியக் கோரிக்கையில் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி பேசியதாவது:-

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என எண்ணற்ற முன்னோடித் திட்டங்கள் பல தந்து, நவீன தமிழ்நாட்டின் சிற்பியாக விளங்கும், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்கி என் உரையைத் துவக்குகிறேன்.

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா"

என திராவிட கொள்கையில், மலை சாயினும், நிலை குலையாத் தன்மையுடன், உறுதியுடன் நின்று திராவிட மாடல் ஆட்சியின் மாட்சியினை உதயசூரியனாக திக்கட்டும் புகழொளி பரப்பிவரும்முதல்வர்அமர்ந்திருக்கும் சிறப்புமிகு இந்த பேரவையில், இன்றைய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கான வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் சபாநாயகர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2026 இல் களம் கண்டு, கழகம் வென்று ஏழாவது முறையாகவும், எழிலார்ந்த தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழ்நாட்டு மக்களுக்கு ஏற்றமிகு நல்ல ஆட்சியினை வழங்க வேண்டும் என மக்கள் விரும்பும் நமது திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கத்தினையும், நன்றியினையும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இன்முகம் காட்டி, இறுமாப்பின்றி இயல்பாக பழகி தேனீ போல சுறுசுறுப்பாக பணியாற்றி இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் எழுச்சியூட்டி வருங்கால தமிழகத்தின் நம்பிக்கையூட்டும் இளந்தலைவராக வலம் வரும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சரான பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இந்தியாவிற்கே கலங்கரை விளக்கமாக திகழும் முதல்வர்!**

முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஆளுமை மிக்க தலைவராக, இந்தியாவிலேயே வேறு எந்த மாநில முதலமைச்சரும் இல்லாத அளவில், நம்முடைய சட்டமன்ற மாண்பைக் காப்பாற்றுகின்ற வகையில், சட்டமன்றத்தில் நிறைவேற்றப் படுகின்ற சட்டமுன்வடிவுகளை இரண்டாவது முறையாக அனுப்பும்போது, மேதகு ஆளுநர் அவர்கள், கையொப்பமிட வேண்டும் என்கிற நிலையில், மேதகு ஆளுநர் அவர்கள் அன்றைக்கு அவற்றை மேதகு குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார்கள்.

ஆனால், இன்றைக்கு அதன்மீது வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றத்தால், இரண்டாவதாக வந்த சட்ட முன்வடிவுகளை நிறுத்தி வைத்தது தவறு என்ற சிறப்பான தீர்ப்பினைப் பெற்று, இன்றைக்கு இந்தியாவிற்கே கலங்கரை விளக்கமாகத் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றம்தான் உயர்ந்தது, சட்டமன்றப் பேரவையில் இயற்றப்படுகின்ற சட்டங்கள் தான் உயர்ந்தது என்றவகையில்தான், இன்றைக்கு சிறப்பான சட்டங்களை மக்களுக்காக அம்பேத்கர் அவர்கள் வழியில், நமது சட்டமன்றம் நிறை வேற்றிக்கொண்டிருக்கிறது.

ஆனால், இன்றைக்கு நாடாளுமன்றத்தில், பேரவையின் துணைத் தலைவர் அவர்கள், பாராளுமன்றம் தான் உயர்ந்தது என்ற சொல்லும்போது, சட்டமன்றம் உயர்ந்ததா, இல்லையா என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த சட்டமன்றப் பேரவையில் இயற்றப்படும் சட்டங்கள் மக்களுக்கான பல நல்ல திட்டங்களைத் வழங்கக்கூடிய சட்டங்களாக இருக்கின்றன. அத்தகைய சட்டமன்றத்தின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்பான முறையில் நிறைவேற்றிய சட்டங்களைப்போன்றே, சிறப்பான சட்டங்களை இப்பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நிதித் துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழக்கூடிய அளவில், தமிழ்நாட்டில் தான், நிதித் துறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்து, நிதித் துறையில் நிதி மேலாண்மை சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு 9.60 சதவிகித பொருளாதார வளர்ச்சியைப் பெற்றிருக்கிற நாம், நிதிநிலை அறிக்கையின்மீது ஆய்வறிக்கையை வழங்கியதும் நமது ஆட்சியில்தான், தளபதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில்தான் முதன்முதலாக ஆய்வறிக்கை வழங்கப்பட்டிருக்கிறதென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பொருளாதாரத்தில் வளர்ச்சி!**

அப்படி பொருளாதார வளர்ச்சியில் சிறப்பாக இருக்கின்ற மாநிலமாக, இந்தியாவிலேயே இன்றைக்கு முன்னோடி மாநிலமாகத் தமிழகம் உயர்ந்திருக்கிறது என்று ஒன்றிய அரசிடம் பல விருதுகளைப் பெற்றிருக்கிறோம் என்றால், அப்படிப்பட்ட பல திட்டங்களைத் தந்திருக்கக்கூடியவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று, நாம் இன்றைக்கு தனிநபர் வருமான வளர்ச்சியிலும் உயர்ந்திருக்கிறோம். மற்ற மாநிலங்களைவிட தனிநபர் வருமான வளர்ச்சியில் நம்முடைய மாநிலம் அதிகளவு உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு 86 ஆயிரம் பட்டாக்களையும் வழங்கியிருக்கிறோம். மேலும், belt area-வில் இருக்கின்ற பட்டாக்களையெல்லாம் வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்காக அதிகார வர்க்கத்திலிருந்து ஏதேனும் சிரமங்களைத் தந்தாலும், அந்தத் தடைக் கற்களை உடைத்தெறிந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சென்னை, செங்கல்பட்டு போன்ற அனைத்து மாவட்டங்களிலும் பட்டாக்கள் வழங்குவதற்கு ஆவன



செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குச் சுற்றுச்சூழல் என்பது மிக முக்கியமான ஒன்று. ஏனென்றால், அடிக்கடி காலநிலை மாற்றத்தின் காரணமாக சுனாமி, பல்வேறு வெள்ளப் பெருக்குகள் மற்றும் கடற்கரை ஓரங்களில், நிறைய இடங்களில் கடல் அரிப்பு ஏற்படுகின்ற நிலை உள்ளன. ஆகவே, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற வகையில், முற்றிலுமாக பிளாஸ்டிக்கை ஒழிக்கின்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, காலநிலை மாற்றம் குறித்து, நல்ல முறையில் அடிக்கடி தொலைக்காட்சியிலும், வானொலியிலும் பல்வேறு விளம்பரங்களை வழங்கி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி காலநிலை மாற்றம் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஓய்வூதிய தாரர்கள் நலன்களைப் பொறுத்தவரையில், ஓய்வூதியதாரர்களை அரசுதான் குழந்தைகளைப் போன்று பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் ஓய்வூதியத்தை வைத்துக்கொண்டுதான் வாழ்க்கை வாழ்கி றார்கள். ஆக, அந்த ஓய்வூதியத்தை அவர்களுக்கு சிறப்பாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு insurance-ல் இருக்கின்ற பிரச்சினைகளையும், அரசு தீர்த்து வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய ஓய்வூதியம் ரூ.30 ஆயிரத்தை ரூ.50 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, ஓய்வூதியத்தை ரூ.50 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். அதேபோன்று, மருத்துவப் படி ரூ.75 ஆயிரத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களின் சிரமத்தை உணர்ந்து, ஓய்வூதியத்தை உயர்த்தியமைக்காக நெஞ்சார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆதி திராவிட மக்களுக்கு அரசு பல்வேறு திட்டங்களை வழங்கியிருந்தாலும், தாட்கோவிலிருந்து செல்லக்கூடிய loan-களையெல்லாம், பல வங்கிகள் கடன் வழங்க மறுக்கின்றன.

அதனால் அவர்கள் கடன் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றுகின்ற வகையில் ஆதி திராவிட மக்களுக்காகவும், பழங்குடியின மக்களுக்காகவும் தனியாக ஒரு வங்கியை உருவாக்கி அதன்மூலம் கடன் வழங்குகின்ற நிலையை உருவாக்கினால், அந்தப் பிரச்சினை இருக்காது என்பதை உணர்ந்து, அதை நம்முடைய அரசு செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, திருவண்ணா மலையில் அண்ணாமலையார் திருக்கோயில் உள்ள நிலையில் இன்றைக்கு ஆந்திராவிலிருந்தும், தெலங்கானாவிலிருந்துபலஇலட்சக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஐந்தாறு வழிகளில் வருகிறார்கள். அவர்களுடைய வண்டிகளை நிறுத்துவதற்கு இடமில்லாமல் இருக்கின்றது. இதற்காக ஒரு பெருந்திட்டத்தை உருவாக்கி, வாகனங்களை நிறுத்துவ தற்கான வளாகத்தினை உருவாக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக ஒரு குழு அமைத்தால்தான், அப்பணிகளைச் சிறப்பாக செய்ய இயலும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எலியும் பூனையும் கதை!**

இன்றைக்கு நான் ஒரு கதையைச் சொல்ல விழைகிறேன். 'கூடா நட்பு.' நிலத்தில் வாழ்ந்த எலியும், நீரில் வாழ்ந்த ஒரு தவளையும், நண்பர்களாயின. இணைபிரியாமல் இருக்கும் நோக்கத்துடன் தவளை ஒரு கயிற்றால் எலியின் கால்களை, தன் காலுடன் இணைத்துக் கொண்டது. முதலில் தன் நண்பனான எலியை அழைத்துக் கொண்டு, புல்வெளிக்குச் சென்று விளையாடியது. பின்னர் தான் வாழும் குளத்திற்கு அழைத்து சென்றது. பழக்க தோஷத்தில் தண்ணீருக்குள் தாவிக் குதித்து, தவளை மகிழ்ச்சியோடு கத்தியது. ஆனால், பாவம் எலியோ, தண்ணீரில் மூழ்கி மிகவும் கஷ்டபட்டது. கடைசியில், எலியானது மூச்சுமுட்டி, இறந்துபோனது.

அப்படி இன்றைக்கு கூடா நட்புடன் சேர்ந்திருப்பவர்களுக்கு கேடாய் முடியுமே தவிர, யார் அதை செய்கிறார்களோ அவர்களுக்கு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**ஆணவ சிரிப்பு!**
**அடிமைச் சிரிப்பு!**

அதேபோல, "நீங்கள் ஆணவ சிரிப்பு சிரிக்கி றீர்கள். நாங்கள் ஆனந்த சிரிப்பு சிரிக்கிறோம்" என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது இங்கே ஆளுங்கட்சியைப் பார்த்து சொன்னார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், நீங்கள் "அடிமை சிரிப்பு தான்'' சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, கூறி விடைபெறுகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணா மலை ஊராட்சி ஒன்றியம் சு.வாளவெட்டி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திக் தர வேண்டும். மேக்களூர் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டித் தர வேண்டும்.

திருவண்ணாமலை ஒன்றியத்தில் பெருமணம், அண்டம்பள்ளம் ஆகிய ஊர்களிலும், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் நூக்காம்பாடியிலும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தில் செல்லங்குப்பம் போன்ற பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தர வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்ட அரசு மருத்துவமனையில் நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர், சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர், நுண் கதிர் மருத்துவர் பணியிடங்களை புதியதாக உருவாக்கித் தர வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனையில் எல்லா வார்டுகளிலும், கணினி அமைத்து நோயாளிகளின் பரிசோதனை முடிவுகளை உடனுக்குடன் கணினி மூலம் அனுப்புவதற்கு வகை செய்திட வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் NRHM திட்டத்தின் கீழ் தாலுகா மருத்துவமனை அமைத்துத் தர வேண்டும்.

திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயர்மட்ட சிகிச்சை அளிக்கும் வகையில் இருதய சிகிச்சை பிரிவு மற்றும் CATH LAB ஏற்படுத்தித் தர வேண்டும்.

திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் சேர்க்கை எண்ணிக்கையினை 150 ஆக உயர்த்தித் தர வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனைக்கு அதி தீவிர சிகிச்சை பிரிவு (Critical Care Block) அமைத்துத் தர வேண்டும்.

**கீழ்பென்னாத்தூர் தொழில்நுட்ப பூங்கா!**

கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பூங்கா (IT PARK) அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில், இராணுவ தளவாடங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை உருவாக்கிட வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் சு.வாளவெட்டி மேல்நிலைப் பள்ளிக்கு வகுப்பறை வசதி, ஆய்வக வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 12 வகுப்பறைக் கட்டடம் மற்றும் பள்ளி வளாகத்தில் கலை அரங்கம் கட்டித் தர வேண்டும். கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம் கட்டித் தர வேண்டும். ஐங்குணம் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு வணிகவியல் மற்றும் பொருளியல் முதுகலை ஆசிரியர் பணியிடம் வழங்க வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, வேளானந்தல் கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். துரிஞ்சாபுரம் ஒன்றியம், ஆர்ப்பாக்கம் கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும். கீழ்பெண்ணாத்தூர் தொகுதி துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், பொற்குணம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதி, தனி நூலக அறை மற்றும் உணவுக்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம் மாதலம்பாடி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டட வசதி மற்றும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆங்குணம் கிராமத்தில் ஏரிக்கு வரும் ஓடையில் தடுப்பணை அமைத்துத் தர வேண்டும். கோட்டன் ஏரி கால்வாயினை தூர்வாரி இருபுறமும் சிமெண்ட் சாலை அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் வட ஆண்டாப்பட்டு சேரியந்தல் கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம் வைப்பூர் கிராமத்திலிருந்து கீழ்பென்னாத்தூருக்கு நகரப் பேருந்து இயக்கிட வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் மற்றும் வேட்டவலம் பேரூராட்சிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் (அ) கசடுகழிவு திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும்.

**வேட்டவலம் பேரூராட்சியை தரம் உயர்த்திடுக!**

வேட்டவலம் பேரூராட்சி வருவாய் பெருக்கும் விதமாக முதல்நிலை பேரூராட்சியிலிருந்து தேர்வுநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்திட வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் மற்றும் வேட்டவலம் பேரூராட்சிகளில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தினை (MGN REGS) செயல்படுத்திட வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட அம்பேத்கர் நகரில் சமுதாய கூடம் மற்றும் நியாய விலை கடை அமைத்துத் தர வேண்டும் மற்றும் கருங்காலிகுப்பம் பகுதியில் சமுதாயக் கூடம் மற்றும் நியாய விலை கடை அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சிக்கு புதிதாக அலுவலக கட்டிடம் அமைத்துத் தர வேண்டும். கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் மற்றும் காவல் நிலையம் அருகில் புதிய பேருந்து நிழற்கூடங்கள் அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியின் திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் நீர் உந்து அறை அமைத்துத் தர வேண்டும்.

வேட்டவலம் பேரூராட்சியில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தினை (MGN REGS) செயல்படுத்திட வேண்டும். வேட்டவலம் பேருந்து நிலையம் மேம்பாடு செய்து தர வேண்டும். வேட்டவலம் பேரூராட்சியில் சந்தை கட்டடம் அமைத்துத் தர வேண்டும் என பேரவைத் துணைத்தலைவர் கோரிக்கை வைத்தார்.